இந்திய உச்சநீதிமன்றம்

அக்டோபர் 26, 2021

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ்.அப்துல் நஸீர்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. கிருஷ்ணா முராரி

குற்றவியல் மேல்முறையீடு எண் 1285/2021

மிதேஷ் குமார் ஜே. ஷா

எதிர்

கர்நாடக அரசு மற்றும் பலர்

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 பிரிவு 482 - மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆகியோரிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் வரையறைகளை மீறி, தன் பங்கைத் தாண்டி நான்கு கூடுதல் குடியிருப்புகளை மேல்முறையீட்டாளர் நிறுவனம் விற்றுவிட்டதாகக் கூறி மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதிர்மேல்முறையீட்டாளர் 2 புகார் செய்துள்ளார் - பிரிவு 482 கீழ் மனுவினை மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றம் முன்பாகத் தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது - எனவே இந்த மேல்முறையீடு - முடிவு: பொருண்மைகளை ஆராய்கையில் எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் கூறப்பட்டவாறு மேல்முறையீட்டாளர் ஏமாற்றியோ அல்லது வேண்டுமென்றோ கூடுதல் குடியிருப்புகளை விற்க முயற்சித்ததாக தெரியவில்லை - ஒரு தனித்துவமான

உண்மை நிலைமை, ஒன்றை ஒன்று சாராமல் உரிமையியல் மற்றும் குற்றவியல் இயல்புடைய ஒரு தகராறுக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றாலும் - தற்போதைய வழக்கில் பரிசீலிக்கப்பட வேண்டிய வினா என்னவென்றால், உரிமையியல் வழக்கு இருக்கும் பட்சத்தில் குற்றவியல் வழக்கு தொடரலாமா என்பதல்ல ஆனால் குற்றவியல் வழக்கிற்கான முகாந்திரங்கள் கூறப்பட்டுள்ளனவா என்பதுதான் - பொருண்மைகளின் அடிப்படையில், குற்றமுறு நம்பிக்கை துரோகம் அல்லது ஏமாற்றுதல் செய்யப்பட்டுள்ளது குறித்து தெளிவான வலிமையான வழக்கு இல்லை - பிரச்சனையில் பெரிதும் வரையறை செய்யப்படுவது ஒப்பந்த மீறல் என்ற ஒன்றுதான் - பரிவர்த்தனையின் ஆரம்பத்தில் அதாவது குற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் நேரத்தில் மோசடி அல்லது நேர்மையற்ற நோக்கம் காட்டப்படாவிட்டாதபோது ஒப்பந்தத்தின் மீறல் மட்டுமே மோசடிக்கு குற்றவியல் நடவடிக்கைக்கு வழிவகுக்க முடியாது - எனவே, குற்றத்தின் சாராம்சமாகக் கருதப்படுவது நோக்கம் மட்டும் தான் - இந்த முடிவை, தற்போதைய பொருண்மைகளோடு பொறுத்தினால் பிரிவுகள் 405, 419 மற்றும் 420 இன் கீழ் வரும் நேர்மையற்ற அல்லது மோசடியான எண்ணம் என்கிற முக்கியமான பகுதி எடுத்துக்காட்டப்படவில்லை - தண்டனைச் சட்டம் 1860 - பிரிவுகள் 405, 419 மற்றும் 420.

சட்ட நடைமுறையை தவறாகப் பின்பற்றுதல் - உரிமையியல் வழக்கை ஒப்பிடும்போது குற்றவியல் வழக்கில் ஒப்பீட்டளவில் விரைவாக பரிகாரம்

வழங்குவதை மட்டும் சாதகமாக எடுத்துக்கொண்டு ஒரு உரிமையியல் வழக்கு குற்றவியல் வழக்காக காட்டப்படுகிறது - அத்தகைய நடவடிக்கை சட்டத்தின் நடைமுறைகளைத் தவறாகப் பயன்படுத்துவதே தவிர வேறில்லை என்பதால், அது முழுமையாக தவிர்க்கப்பட வேண்டும் - குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 - பிரிவு 482.

இம்மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றத்தின் தீர்முடிவுகளாவன:

1.1 மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட புகாரானது குற்றமுறு நம்பிக்கை துரோகம் மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றை செய்ததை பற்றியதாகும். குற்றமுறு நம்பிக்கை மோசடியானது இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 405 இல் குறிப்பிடப்பட்டுள்ளப்படி ஒருவரின் சொந்த பயன்பாட்டிற்காக, ஒரு நேர்மையற்ற நோக்கத்துடன் மற்றவரின் சொத்தை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது மாற்றுவது மற்றும் மோசடி செய்வதாகும், மறுபுறம் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 415-ன் கீழ் ஒரு குற்றமாக வரையறுக்கப்பட்டப்படி , ஒரு குறிப்பிட்ட நபருக்கு எந்தவொரு சொத்தையும் வழங்க மற்ற தரப்பினரைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நேர்மையற்ற அல்லது மோசடி நோக்கத்தைக் கொண்ட ஒரு உள்ளக்கருத்தாகும் அடங்கும். அந்த சொல்லப்பட்ட குற்றங்கள் செய்யப்பட்டதை நிரூபணம் செய்ய மேலிடான முன் நிபந்தனையாக 'நேர்மையற்ற எண்ணத்தை' தெளிவாக இரு பிரிவுகளும் நிர்ணயித்துள்ளது. எனவே, தரப்பினர்களின் வாதங்களை பரிசீலிக்க,

மேல்முறையீட்டாளர்களின் நடவடிக்கைகள் ஒரு நேர்மையற்ற அல்லது மோசடி திட்டத்தை ஊக்குவிப்பதற்காக செய்யப்பட்டதா என்ற கேள்வி ஆராய வேண்டியதாக உள்ளது. அத்தகைய பொருண்மைகளை கவனமாக மதிப்பிடும்,

1.2 எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் கூறியவாறு, கூடுதலாக இருக்கும் குடியிருப்புத் தளங்களை மேல்முறையீட்டாளர் ஏமாற்றி அல்லது வேண்டுமென்றே விற்க முயன்றார் என எந்தவிதத்திலும் முடிவு செய்ய முடியாது. ஜிபிஏ ரத்து செய்யப்பட்டப் பிறகு, தரப்பினர்களுக்கிடையே உள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்கு 02.03.2016 அன்று மேல்முறையீட்டாளரே இசைவு பொதுவரை அணுகினார், அதில் எதிர்மேல்முறையீட்டாளர் 2 09.03.2016 அன்று மறுப்புரையை தாக்கல் செய்தார். 29.03.16 அன்று தான் எதிர்மேல்முறையீட்டாளர் 2 மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக குற்றம் எண் 185/2016 என்ற முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்திருந்தார். மேலும், எதிர்மேல்முறையீட்டாளர் 2 தான் உரிமையியல் வழக்குகளை தொடர்வதற்காக மேல்முறையீட்டாளர்களால் நான்கு கூடுதல் அடுக்குமாடி குடியிருப்புகளை விற்பனை செய்வது தொடர்பான தனது கோரிக்கையை திரும்பப் பெற்றார்.

1.3 எப்படியாயினும், உரிமையியல் மற்றும் குற்றவியல் தன்மை ஆகிய இரண்டும் பிரச்சனை எழக்கூடிய விஷயத்தின் பொருளாக இருப்பின் ஒவ்வொன்றும் மாற்றத்தைக் கருதாது தொடரப்பட்ட வேண்டும் என்பதில் சிறிதளவு

ஐயப்பாடு கூட ஒருவேளை இல்லை. இந்த வழக்கில், பரிசீலிக்கப்பட வேண்டிய உண்மையான கேள்வி, உரிமையியல் வழக்கு இருக்கையில் ஒரு குற்றவியல் வழக்கைத் தொடர முடியுமா என்பது அல்ல ஆனால் குற்றவியல் வழக்கிற்கான முகாந்திரங்கள் கூறப்பட்டுள்ளனவா என்பதுதான். பொருண்மைகளின் அடிப்படையில், குற்றமுறு நம்பிக்கை துரோகம் அல்லது ஏமாற்றுதல் செய்யப்பட்டுள்ளது குறித்து தெளிவான வலிமையான வழக்கு இல்லை. தரப்பினர்களுக்கு இடையேயான தகராறு, ஒப்பந்தத்தை மீறியதற்கானதாக கருதலாம்.

2. ஹிருதய ரஞ்சன் பிரசாத் வர்மா மற்றும் பலர் எதிர் பிஹார் மாநில அரசு என்ற வழக்கில் இந்நீதிமன்றம் பரிவர்த்தனையின் ஆரம்பத்தில் அதாவது குற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் நேரத்தில் மோசடி அல்லது நேர்மையற்ற நோக்கம் காட்டப்படாவிட்டாதபோது ஒப்பந்தத்தின் மீறல் மட்டுமே மோசடிக்கு குற்றவியல் நடவடிக்கைக்கு வழிவகுக்க முடியாது என்று கருதியது. எனவே, குற்றத்தின் சாராம்சமாகக் கருதப்படுவது நோக்கம் மட்டும் தான். இந்த முடிவை, தற்போதைய பொருண்மைகளோடு பொறுத்தினால் பிரிவுகள் 405, 419 மற்றும் 420 இன் கீழ் வரும் நேர்மையற்ற அல்லது மோசடியான எண்ணம் என்கிற முக்கியமான பகுதி எடுத்துக்காட்டப்படவில்லை, இந்த வழக்கில் இந்நீதிமன்றத்தின் தலையீடு தேவைப்படுகிறது.

*ஹிருதய ரஞ்சன் பிரசாத் வர்மா மற்றும் பலர் எதிர் பீகார் மாநிலம் மற்றும் ஒருவர் (2000) 4 எஸ்சிசி 168; [2000] 2 எஸ்சிஆர் 859 சார்வுறபட்டது.

3. மேல்முறையீட்டாளருக்கு நேர்மையற்ற அல்லது மோசடியான எண்ணம் கட்டப்படவில்லை. இந்த வழக்கில் உரிமையியல் விவகாரங்கள் குறித்து தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்றாலும், அதன்படி எதிர்மேல்முறையீட்டாளர் 2 பல உரிமையியல் வழக்குகளைத் தொடங்கி உள்ளார் என்றாலும், இந்த வழக்கை ஒரு குற்றவியல் குற்றவியல் வழக்காக கருத முடியாது. ஒரு உரிமையியல் வழக்குகளின் எல்லையை நீட்டி, அதன் மூலம் ஒரு குற்றவியல் வழக்காக மாற்ற முயற்சி செய்யப்பட்டுள்ளது.

இது ஒரு உரிமையியல் வழக்கை விட ஒரு குற்றவியல் வழக்கில் ஒப்பீட்டளவில் விரைவான தீர்ப்பை வழங்குபடுவதால் ஒரு உரிமையியல் வழக்கிற்கு குற்றவியல் நிறம் கொடுப்பதை இந்த நீதிமன்றம் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதுபோன்ற நடைமுறை, அத்தகைய நடவடிக்கை சட்டத்தின் நடைமுறைகளைத் தவறாகப் பயன்படுத்துவதே தவிர வேறில்லை என்பதால், அது முழுமையாக தவிர்க்கப்பட வேண்டும்.

தி/ள் இந்தியன் ஆயில் கார்பொரேஷன் எதிர் தி/ள் என்இபிசி இந்தியா லிமிடெட் மற்றும் பலர் (2006) 6 எஸ்.சி.சி 736: [2006] 3 சப்ளிமெண்ட். எஸ்.சி.ஆர் 704; ஜி. சாகர் சூரி மற்றும் ஒருவர் எதிர் உ.பி. மாநிலம் மற்றும் பலர் (2000) 2 எஸ்சிசி 636 ; [2000] 1 எஸ்சிஆர் 417; ஹரியானா மாநிலம் மற்றும் பலர் எதிர் சி.எச். பஜன் லால் மற்றும் பலர் (1992) எஸ்.சி.சி. (கிரி) 426; ரந்தீர் சிங் எதிர் உ.பி. மாநிலம் & மற்றும் பலர் 2021(12) ஸ்கேல் 55 – சார்வுறப்பட்டது.

பேராசிரியர் ஆர்.கே.விஜயசாரதி மற்றும் ஒருவர் எதிர் சுதா சீதாராம் & பலர் (2019) எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 208; கர்நாடக மாநிலம் எதிர் எம்.தேவேந்திரப்பா மற்றும் ஒருவர் (2002) 3 எஸ்சிசி 89:[2002] 1 எஸ்.சி.ஆர் 27; ப்ரீத்தி சரஃப் & பலர் எதிர் தலைநகர் டெல்லி மாநிலம் மற்றும் ஒருவர் 2021 எஸ்சிசி ஆன்லைன் எஸ்சி 206; திரு. கிருஷ்ணா ஏஜென்சிஸ் எதிர் ஆந்திர மாநிலம் மற்றும் பலர் (2009) 1 எஸ்சிசி 69: [2008] 16 எஸ்.சி.ஆர் 20- குறிப்பிடப்பட்டது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2002] 1 எஸ்சிஆர் 275	குறிப்பிடப்பட்டது	பத்தி 19
[2008] 16 எஸ்.சி.ஆர் 20	குறிப்பிடப்பட்டது	பத்தி 22
[2000] 2 எஸ்சிஆர் 859	சார்வுறப்பட்டது	பத்தி 39

[2006] 3 சப்ளி. எஸ்.சி.ஆர் 704 சார்வுறப்பட்டது பத்தி 41

[2000] 1 எஸ்சிஆர் 417 சார்வுறப்பட்டது பத்தி 43

குற்றவியல் மேல்முறையீட்டு வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 1285/2021.

பெங்களூருவில் உள்ள கர்நாடகா உயர்நீதிமன்றம் குற்றவியல் மனு எண் 2691/2016 இல் 13.08.2019 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர்கள்: சைலேஷ் மடியாள், சுதான்ஷு பிரகாஷ், திருமதி ராக்கி எம்., வைபவ் சபர்வால், திருமதி. ஸ்ருதி ஐயர், திருமதி நேஹா ஜெயின்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர்கள்: வி. என். ரகுபதி, முகம்மது அப்சல் அன்சாரி.

தீர்ப்புரை

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் திரு. கிருஷ்ணா முராரி அவர்களால் வழங்கப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இ.த.ச.420 உடன் இணைந்த 34 இல் உள்ள குற்றங்களின் கீழ் மேல்முறையீட்டாளர் மீது பதியப்பட்ட 29.03.2016 தேதியிட்ட மு.த.அ. 185/2016 ஐ எதிர்த்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் (இது முதல் கு.வி. மு. ச. என்று குறிப்பிடப்படும்) பிரிவு 482 இன் கீழ் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மனு எண் 2691/2016 இல் பெங்களூருவில் உள்ள கர்நாடக உயர்நீதிமன்றம் பிறப்பித்த 13.08.2019 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவை எதிர்த்தும், இ.த.ச.பிரிவு 34 உ/இ பிரிவுகள் 406, 419, 420 இன் கீழான குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 29.03.2017 தேதியிட்ட குற்ற அறிக்கை தொடர்பாக IV கூடுதல் பெருநகர குற்றவியல் நடுவர் கோப்பில் உள்ள அ.ப. எண் 206098201/2017 இல் நடவடிக்கைகளை ரத்து செய்யக்கோரியும் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதை எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

3. இந்த நீதிமன்றம் முன்பு இந்த மேல்முறையீடு நிலுவையிலிருக்கும்போது மேல்முறையீட்டாளர் இறந்துவிட்டார், 29.09.2021 தேதியிட்ட உத்தரவால் அவரது பெயர் நீக்கப்பட்டுவிட்டது. எனவே, இங்கு பயன்படுத்தப்பட்ட 'மேல்முறையீட்டாளர்கள் ' என்ற சொல் மேல்முறையீட்டாளர் 2 ஐ மட்டுமே சேர்ந்துள்ளதாக கருதப்பட வேண்டும்.+

வழக்கின் பொருண்மைகள்:

4. ஒரு குறிப்பிட்ட சொத்தின் மேம்படுத்த மேல்முறையீட்டாளர்கள் கம்பெனியுடன் (மேல்முறையீட்டாளர் கம்பெனியின் இயக்குனராக உள்ளார்) அதாவது ராஜராஜேஸ்வரி பில்ட்கான் பிரைவேட் லிமிடெட் (இனி கட்டுமானதாரர் நிறுவனம் என்று அழைக்கப்படும்) உடன் எதிர்மேல்முறையீட்டாளர் 2 கூட்டு வளர்ச்சி ஒப்பந்தம் (ஜெடிஏ) ஒன்றினை ஆரம்பத்தில் 07.08.2013 அன்று நிறைவேற்றினார். முற்றிலுமாக குடியிருப்புகளாக அல்லது வணிக வளாகத்துடன் கூடிய குடியிருப்புகளாக சொத்து மேம்படுத்தப்பட இருந்தது. கூட்டு வளர்ச்சி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, அதேநாளில் பொது பகரப்பொறுப்பு உரிமை (ஜிபிஏ) கூட எழுதிக்கொடுக்கப்பட்டது. அவர்களுக்குரிய பிரிக்கப்படாத மற்றும்

கட்டப்பட்ட பகுதி பங்குகளை குறிப்பிட்டு மேல்முறையீட்டாளருடன் பின்னர் எதிர்மேல்முறையீட்டாளர் -2 துணை ஒப்பந்தமும் செய்துள்ளார்.

5. மேலும், 19.02.15 அன்று, எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 மற்றும் கட்டுமானதாரர் நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்று கையெழுத்திடப்பட்டது, இதன் மூலம், பிரிக்கப்படாத பகுதி மற்றும் மேல்கட்டுமான பகுதியில் எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 இன் பங்குகளில் 8000 சதுர அடி விற்பனை செய்ய நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

5. ரெலிகேர் ஃபின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து அவர் வாங்கிய கடனை பகுதியாக செலுத்துவதற்காக 2 வது எதிர்மேல்முறையீட்டாளர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்புக்கும் ரூ. 40,00,000/- செலுத்தி, 15 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான மறுப்பின்மை சான்றிதழை மேல்முறையீட்டாளர்கள் பெற வேண்டும்.

6. இந்த தருணத்தில், ரெலிகேர் ஃபின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்திற்குச் செலுத்தப்படும் கட்டணங்களைச் ஈடுசெய்வதற்கு,

அதன் பங்கிற்கு அதிகமான கூடுதல் அடுக்குமாடி குடியிருப்புகளை விற்பதற்கு உரிமை உண்டு, அதாவது, ரெலிகேர் ஃபின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 வாங்கிய கடனை பகுதியாக செலுத்துவதற்கு பதிலாக நிறுவனத்தின் பங்குக்கு கூடுதலாக 8000 சதுர அடி கட்டப்பட்ட பகுதி ஒதுக்கப்படும் என்று தரப்பினரிடையே வாய்மொழி உறுதிமொழியாக ஒப்புக்கொள்ளப்பட்டது என்று மேல்முறையீட்டாளர் சார்பில் வாதிடப்பட்டது.

7. இறுதியில், எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 இன் சார்பாக, அந்த காட்டுமானதாரர் நிறுவனம் இரண்டு அடுக்குமாடி குடியிருப்புகள், அடுக்குமாடி குடியிருப்பு எண் 202 & 203 ஆகியவற்றிற்கான விற்பனை ஆவணங்களை எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 இன் மகள் மற்றும் மருமகனுக்கு ஆதரவாக நிறைவேற்றியது. மேலும், 27.08.15 அன்று நிறுவனம் மற்றொரு அடுக்குமாடி குடியிருப்பு எண் 301 க்கான விற்பனை ஆவணத்தை திருமதி. யாஷோதா சுந்தரராஜன் என்ற ஒருவர் பெயரில் நிறைவேற்றியது.

8. பின்னர், மின்னஞ்சல் மூலம், மேற்கூறிய 6821 சதுர அடி கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை (நிறுவனத்திற்கு 19.02.15 தேதியிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி வழங்கப்பட்ட 8000 சதுர அடிகளில்)

சம்பந்தப்பட்ட வாங்குபவர்களுக்கு ஆதரவாக நிறைவேற்றவும் பதிவு செய்யவும், மேலும் ரிலேகரே ஃபின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணம் செலுத்தவும் எதிர்மேல்முறையீட்டாளர் 2க்கு நிறுவனம் தெரிவித்தது. இந்த நிலையில், நிறுவனம் ஜேடிஎ இன் விதிமுறைகளை பின்பற்றவில்லை என்று கூறி, அதன்படி ஜிபிஎ- ஐ ரத்து செய்தது என்று வாதிட்டு எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 மேல்முறையீட்டாளர்களுக்கு ஒரு கடிதத்தை வழங்கினார்.

9. சொத்து மீதான மூன்றாம் தரப்பு உரிமைகளை எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 விற்பதிலிருந்து அல்லது உருவாக்குவதிலிருந்து தடுக்கும் உத்தரவு கோரி பாதிக்கப்பட்ட நிறுவனம் இசைவு தீர்ப்பாயச் சட்டத்தின் பிரிவு 9ன் கீழ் இசைவுத் தீர்ப்புக்காக ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்தது. மறுபுறம் எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 தரப்பினருக்கு இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட பங்கை விட அதிகமான அடுக்குமாடி குடியிருப்புகளை விற்பனை செய்ததாகக் கூறி காவல்துறையில் புகார் அளித்தார். மற்றவற்றுக்கிடையில் புகார்தாரர் (எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2) இரண்டு வாதங்களை முன்வைத்தார்:

- முதலாவதாக, நிறுவனத்திற்கு சாதகமாக ஜிபிஎ நிறைவேற்றப்படவில்லை, எனவே அந்த அடுக்குமனைகளை நிறுவனம் விற்றிருக்கக்கூடாது.

- இரண்டாவதாக, எதிர்மேல்முறையீட்டாளர் 2 இற்கு உரிய குடியிருப்புத் தளங்கள் நிறுவனத்தால் விற்கப்பட்டுள்ளன. கூடுதலாக எண் 002, 301,304, 404 கொண்ட குடியுருபுத் தளங்கள் விற்கப்பட்டுள்ளன.

10. புகாரின் தொடர்ச்சியாக, இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 420 உடனிணைந்த பிரிவு 34 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளர்கள் 1 மற்றும் 2 இற்கு எதிராக 29.03.2016 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை எண் 185/2016 பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள், அதனால் கு.வி.மு.ச. பிரிவு 482 ஐக் காட்டி அந்த மு.த.அ நீக்கறவு செய்ய கர்நாடக உயர்நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். மேலும், இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 406, 419, 420 உடன்படிக்க 34 இன் கீழ் உள்ள குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை அந்த நடவடிக்கையில் நீக்கறவு செய்யவும் கோரப்பட்டுள்ளது.

11. இதற்கிடையில், இசைவுத் தீர்ப்பாய நடவடிக்கையில் இசைவுத் தீர்வர் மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆகியோரின் கோரிக்கைகளை பகுதியாக அனுதித்தார். எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் ஒருதலை முடிவாக, ஜிபிஎ ரத்து செய்யப்பட்டது சட்டவிரோதமானது என்றும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரையறைகளின்படி நிறுவனத்திற்கு விற்பனை

ஒப்பந்தங்கள்/விற்பனை பத்திரங்கள் ஏற்படுத்த நிறுவனத்திற்கு உரிமை உள்ளது என்றும் இசைவுத் தீர்வார் முடிவு செய்துள்ளார். இசைவுத் தீர்ப்பில் விடை அளிக்கப்படாத கேள்வி, எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளின் (e), (f) மற்றும் (g) பத்திகளில் கோரப்பட்ட தனது கோரிக்கையை திரும்பப் பெற்றதால், நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகளின் பொறுத்து , அந்த வழக்குகளில் பிரச்சினையைத் தொடர சுதந்திரத்துடன் இருந்தது.குறிப்பாக பத்தி (f)இல் உள்ள வேண்டுதலானது:-

"குடியிருப்புத்தள எண் 002, 301, 304 & 404 இல் உள்ள தற்போதைய குடியிருப்பாளர்களை அகற்றியும் நீக்கி, அதை புதிய குடியிருப்புத் தளம் போல, அந்த குடியிருப்புத்தளங்களின் உட்புறங்களை மறுசீரமைத்து புதுப்பித்து அந்த குடியிருப்புத்தள குடியிருப்பு சான்றுடன் உடமையாகித் தர மனுதாரர்/மேம்படுத்துவோருக்கு உத்தரவிட"

12.தீர்வத்தால் பாதிப்படைந்து, இசைவுத்தீர்வு சட்டம் பிரிவு 34 இன் கீழ் மேற்சொன்ன தீர்வதற்கு எதிர்மேல்முறையீட்டாளர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

13. முடிவாக, மனுவை ரத்து செய்வதும் உயர்நீதிமன்றத்தின் முன் வந்தது, மேல்முறையீட்டாளர்களால் குடியிருப்புகளை விநியோகிப்பது தொடர்பான இந்த தகராறுக்கு தீர்ப்பாயம் பதிலளிக்கவில்லை, மேலும் இது தரப்பினர்களுக்கு இடையில் நிலுவையில் உள்ள இசைவு தீர்வரின் அதிகாரத்திற்கு வழக்குக்கு உட்பட்டதல்ல

என்று கூறி இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு மாறாக குடியிருப்புகளை விற்றதாக மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றச்சாட்டுகள் இருப்பதால், இந்த விவகாரத்தில் தலையிட எந்த காரணமும் இல்லை. எனவே இந்த மேல்முறையீட்டாளர்கள் சிறப்பு அனுமதியின் மனுவின் மூலம் இந்நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட வாதங்கள்

14. இந்த வழக்கின் தொடர்ச்சியான நிகழ்வுகள் கூறப்பட்டுள்ள குற்றத்திற்கு தேவையான பகுதிகளை பூர்த்திசெய்யவில்லை என்பதால், எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு உரிமையியல் வழக்கிற்கு குற்றவியல் வண்ணம் பூச முனைகிறார் என இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டுள்ளனர். நிலுவையிலுள்ள உரிமையியல் நடவடிக்கையில் அவரது வழக்கைத் தொடரும் சுதந்திரத்துடன் இசைவுத் தீர்வு நடவடிக்கையிலிருந்து அந்த குடியிருப்பத் தளங்களைப் பொறுத்து எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் கோரிக்கை திரும்பப் பெற்றதால் குடியிருப்புத் தளங்களை விற்ற பிரச்சனையில் இசைவுத் தீர்ப்பாளர் செவிசாய்க்கவில்லை என வாதிடப்பட்டது. மேலும், உரிமையியல் வழக்கு மூலம் தொடர எதிர்மேல்முறையீட்டாளர் முடிவு செய்துள்ளதால், அதே பிரச்சனையில் குற்றவியல் புகார் செய்தது நீக்கப்பட்டவேண்டும்.

15. தரப்பினர்களுக்கிடையேயான முழு வழக்கு தரப்பினர்களுக்கிடையே ஒப்புக்கொள்ளப்பட்ட பங்கைவிட அதிகமாக விற்பனை செய்யப்பட்டது என்பதாகும், முழுமையாக உரிமையியல் தன்மையுடைய வழக்கை தீர்க்கும் பொருட்டு எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் புகார் தாக்கல் செய்யப்பட்டது என்று மேலும் பணிந்துரைக்கப்பட்டது.

16. மேற்சொன்ன வாதத்தை நிலைநிறுத்த, பேராசிரியர் ஆர். கே. விஜயசாரதி மற்றும் ஒருவர் எதிர் சுதா சீதாராமன் மற்றும் ஒருவர் வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மேல்முறையீட்டாளர் சார்வுற்றனர். குறிக்கப்பெற்ற சம்பந்தப்பட்ட பத்திகள் பின்வருமாறு:-

"23. குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 482 இன் அதிகார வரம்பு கவனமுடன் செலுத்தப்படவேண்டும். அதிகார வரம்பை செலுத்துகையில், ஒரு உயர்நீதிமன்றம், அடிப்படையில் உரிமையியல் தன்மை கொண்ட ஒரு வழக்கிற்கு குற்றவியல் தன்மையின் வடிவம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு குற்றச் செயலை உருவாக்குவதற்குத் தேவையான கூறுகள் புகாரின் சாதாரண வாசிப்பின்போது காணப்படாவிட்டால், குற்றவியல் நடவடிக்கைகளை தொடர்தல் நீதிமன்றத்தின் செயல்முறையைத் தவறாகப் பயன்படுத்துவதைக் குறிக்கும்.

24. தற்போதைய வழக்கில், மேல்முறையீட்டாளரின் மகள் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக பணம் வசூலிக்க உரிமையியல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு நிலுவையிலுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட பரிவர்த்தனை நடந்த தேதிக்கு ஆறு வருடங்கள் கழித்து, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் கழித்து முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக புகார் அளித்துள்ளார். புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கூற்றுகள் சாதாரணமாகப் படிக்கப்படும்போது தண்டனைச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களை அமையுமாறு தேவையான பகுதிகளை தெரிவிக்கவில்லை. மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக முதல் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட புகார், நீதிமன்ற நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாகவும், தள்ளுபடி செய்யப்படக்கூடியதாகவும் உள்ளது."

17. புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுத்திகொடுக்கப்பட்டதையோ அல்லது மேல்முறையீட்டாளர் நிறுவனத்திற்கு சந்தை உரிமை கொடுக்கப்பட்டதையோ எதிர்மேல்முறையீட்டாளர் மறுக்கவில்லை என மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் சமர்ப்பித்தார். துணை ஒப்பந்தத்தில் உள்ள மாறுபாடாகிய, ரெலிகேர் ஃபின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு பகுதியாக செலுத்தப்பட வேண்டிய பதிலாக மனுதாரர் நிறுவனத்திற்கு 8000 சதுர அடி கூடுதல் பகுதியை ஒதுக்குவது எழுத்துப்பூர்வமாக செய்யப்படவில்லை, எனவே,

எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 மேல்முறையீட்டாளர்களின் பரிவர்த்தனைகளை ஒரு குற்றவியல் குற்றமாக காட்ட முயன்றார். தரப்பினர்களுக்கிடையே உள்ள பிரச்சனை எவ்வாறேனும் இசைவுத் தீர்வாளரால் முடிவு செய்யப்பட்டுள்ளதால், தற்போதுள்ள குற்றவியல் புகார் நீக்கறவு செய்யத்தக்கது.

நேரில் முன்னிலையாகிய எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் முன்வைக்கப்பட்ட வாதங்கள்

18. மாறாக, தனிப்பட்ட முறையில் ஆஜரான எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2, மேல்முறையீட்டாளர்களின் அபிவிருத்தி நிறுவனம் 9 அடுக்குமாடி குடியிருப்புகளை மட்டுமே விற்க உரிமை பெற்றிருப்பதால், மொத்தம் 13 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான விற்பனை ஆவணத்தை நிறைவேற்றியுள்ளது என்று கூறுகிறது. மேலும் மேல்முறையீட்டாளரின் பாங்கான 9 குடியிருப்புத் தளங்களைத் தாண்டி கூடுதலாக 4 குடியிருப்புத் தளங்கள் (குடியிருப்புத் தள எண்கள் 002, 301, 304 & 404) விற்கப்பட்டுள்ளது எனவே மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதிர்மேல்முறையீட்டாளர் 2 மோசடி புகார் தாக்கல் செய்ய வேண்டியதாயிற்று.

19. மேல்முறையீட்டாளரின் வாதமான உரிமையியல் பிரச்சனைக்கு குற்றவியல் வண்ணம் பூசப்பட்டுள்ளது என்று கர்நாடகா அரசு எதிர் எம்.

தேவேந்திரப்பா மற்றும் ஒருவர் வழக்கின் முடிவை சார்ந்து மேல்முறையீட்டாளர் வாதிடப்பட்டதிற்கு, எதிர்மேல்முறையீட்டாளர் 2 தனது எதிர்ப்பில், புகார் குற்றவியல் குற்றத்திற்கான பகுதிகளை கூறியுள்ளதா இல்லையா மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உள்ள எதிர்வழக்குரையின் பேரில் உள்ளதா என்பதை சார்வுற்று, அது விசாரணையில் நிரூபிக்கப்பட்டால் அது விடுதலைக்கு இட்டுச் செல்லும் என பணிந்துரைக்கப்பட்டது.

20. அவர்களால் விற்க அனுமதிக்கப்படாத சொத்தினை மேல்முறையீட்டாளர்கள் விற்றப்பின், மேற்சொன்ன சொத்தை மீட்பதற்காக, யாருடைய சொத்தை விற்றார்களோ அவர் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற காரணத்திற்காக மட்டும் குற்றவியல் வழக்கிலிருந்து நழுவ முடியாது என மேலும் சமர்ப்பிக்கப்பட்டது.எதிர்மேல்முறையீட்டாளர் மேலும் இந்த நீதிமன்ற வழக்கான பிரீத்தி சராப் மற்றும் ஒருவர் எதிர் தலைநகர டெல்லி மற்றும் ஒருவர் தீர்ப்பினை சார்ந்துள்ளார். அதில் கீழ்கண்டவாறு கருதப்பட்டது:

> ’32. தற்போதைய வழக்கில், புகார்/முதஅ/குற்ற அறிக்கை ஆகியவற்றை கவனமாகப் படிக்கும்போது, குற்றம் நடந்துள்ளதாக புகார் தெரிவிக்கவில்லை என்று கூற முடியாது. புகார்/முதஅ/குற்ற ஆகியவற்றை ஆகியவற்றில் உள்ள புகார்கள் அடிப்படையில் இதச பிரிவுகள் 406 மற்றும் 420 இன் கீழ் உள்ள குற்றங்களுக்கான பகுதிகள் இல்லை என்று கூறமுடியாது. புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள்

சரியா அல்லது தவறா என்பது விசாரணையின்போது பெறப்படும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் கூற விரும்புகிறோம். ஒப்பந்தம் மீறுவதற்கான நிவாரணம் அல்லது இசைவுத் தீர்வு நடவடிக்கை சாதாரணமாக மேல்முறையீட்டாளரால் துவக்கப்பட்டது என்பதற்காக உரிமையியல் தீர்வு மட்டுமே தீர்வு என்றும் எவ்வகையிலும் குற்றவியல் நடவடிக்கை தொடர்வது என்பது அத்தகைய நடவடிக்கைகளை செல்லாதாதாக்க கு.வி.மு.ச. பிரிவு 482 இன் கீழ் உயர்நீதிமன்றத்தின் இயல்பான அதிகாரத்தை செலுத்துவது நீதிமன்றத்தின் தவறான நடைமுறையாக அமையாது என நீதிமன்றம் தானாகவே முடிவுக்கு வர இயலாது.

33. நாங்கள் தரப்பினர்களின் வாதுரை, புகார்/முதஅ/குற்ற அறிக்கை மற்றும் கீழமை நீதிமன்றங்களின் உத்தரவுகளையும் பார்த்து, பதிவிலுள்ள சான்றுகளையும் பரிசீலித்தோம். தரப்பினர்களின் கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டபின், தற்போது பரிசீலைக்கு நம்முன் உள்ள வழக்கு குற்றவியல் விசாரணையை ஒதுக்கக்கூடிய வழக்கு அல்ல என்று நாம் நிறைவு அடைந்துள்ளோம். உயர்நீதிமன்றம் தனது சொந்த அதிகார வரம்பை பயன்படுத்தி குற்றவியல் வழக்கை ரத்து செய்தது நியாயமற்றது. (i) ஒப்பந்த மீறல் பபுகார் காரணமாக விற்பனை ஒப்பந்தம் முடிக்கப்பட்டது (ii) மேல்முறையீட்டாளரால் இசைவுத் தீர்வு

நடவடிக்கை துவக்கப்பட்டுள்ளது ஆகிய இரு சூழ்நிலைகளை உயர்நீதிமன்றம் முதன்மையானதாக கருதுகிறது. உயர்நீதி மன்றத்தால் பார்க்கப்பட்ட இரு கூறப்பட்ட சூழ்நிலைகளும் எங்கள் கருத்துப்படி சத்தத்தில் நிலைக்கத்தக்கதல்ல, தற்போதைய புகார்/முதஅ / குற்றப்பத்திரிகையில் சொல்லப்பட்ட விஷயங்கள் வணிக பரிமாற்றத்தை காட்டுகிறது. ஆனால் அத்தகைய நடவடிக்கையிலிருந்து ஏமாற்றுதல் குற்றம் விடுவிக்கப்பட்ட முடியாது என்ற முடிவிற்கு அது ஒரு கடினமான காரணமாகும். உண்மையில் பல நேரங்களில் ஏமாற்றுதல் குற்றம் வணிக பரிமாற்றத்தின்போது செய்யப்படுகிறது, மேலும் விளக்கங்கள் இதச பிரிவு 415, 418 மற்றும் 420 இன் கீழ் கூறப்பட்டுள்ளன. ட்ரைசன்ஸ் கெமிக்கல் இண்டஸ்ட்ரி எதிர் ராஜேஷ் அகர்வால் மற்றும் பலர் வழக்கில் அதே போன்ற கருத்துக்கள் இந்த நீதிமன்றத்தால் சொல்லப்பட்டுள்ளன:-

9. பிரச்னைக்குரிய செயல் குற்றமாக இருக்கும்போது, பிரச்சனைகள் இசைவுத் தீர்ப்பிற்கு அனுப்பப்படுவதற்கு ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருப்பது குற்றவியல் நடவடிக்கைக்கு சரியான பதிலாக அமையும் என்ற காரணத்தை எங்களால் ஏற்க முடியவில்லை. ஒப்பந்த மீறலால் பாதிக்கப்படும் நபருக்கு உதவி தரும் நிவாரணமாக இசைவுத் தீர்வு உள்ளது, ஆனால், ஒப்பந்தத்தின் கீழ் எந்த செயலையும் நிறைவேற்றுதல் தொடர்பாக அந்த செயல் இருந்த போதிலும்

குற்றமாகக் கருதப்படும் எந்த செயல் குறித்து இசைவுத் தீர்வாளர் விசாரணை நடத்த முடியாது. உயர்நீதிமன்றம் புகாரை அதன் தொடக்க நிலையிலேயே முடித்து வைப்பதற்கு அவை சரியான காரணங்கள் அல்ல. விசாரணை நிறுவனம் குற்றச்சாட்டுகளின் முழு அளவையும் ஆராய்ந்து அதன் சொந்த முடிவுக்கு வர சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய விசாரணையின் முன்கூட்டியது ஹரியானா மாநிலம் எதிர் பஜன் லால் (1992 சப் (1) எஸ்சிசி 335) வழக்கில் குறிப்பிட்டதுபோல தீவிர வழக்குகளுக்கு மட்டுமே பொருத்தும்.

21. உரிமையியல் வழக்கு தொடரப்பட்ட மூன்று வருடங்களுக்குப் பிறகுதான் குற்றவியல் வழக்கு தொடரப்பட்டது, மேலும் குற்றத்தை உருவாக்குவதற்குத் தேவையான அம்சங்கள் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்ற பொருண்மைகளின் பேரில் பேராசிரியர் ஆர்.கே.விஜயசாரதி மற்றும் ஒருவர் எதிர் சுதா சீதாராம் மற்றும் ஒருவர் என்ற வழக்கு தீர்வு செய்யப்பட்டதால், அதை மேல்முறையீட்டாளர் சார்வுற்றது தவறானது என்று மேலும் வாதிடப்பட்டது. மாறாக இந்த வழக்கில், பிரிவு 405 மற்றும் 415 இன் கீழ் குற்றம் அமைய சம்பந்தப்பட்ட பகுதிகள் தெளிவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

22. ஸ்ரீ கிருஷ்ணா ஏஜென்சிஸ் எதிர் ஸ்டேட் ஆஃப் ஆந்திரா மற்றும் ஒருவர் வழக்கை சார்வுற்று, பிரச்சனை தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டதாலும், தீர்ப்பாய

நடவடிக்கைகள் பின்னர் நடந்ததாலும் மட்டுமே குற்றவியல் நடவடிக்கையை ரத்து செய்யப்பட முடியாது என்று எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் மேலும் வாதிடப்பட்டது. மேற்கூறிய தீர்ப்பின் 7 வது பத்தியை எதிர்மேல்முறையீட்டாளரால் வலியுறுத்தப்பட்டது, அதில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

"எதிர்மேல்முறையீட்டாளர் 2 சார்பாக, உயர்நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்ட வாதங்கள் மீண்டும் வலியுறுத்தப்பட்டு, இருப்பினும் திரு. அதியாருவால் காட்டப்பட்ட முடிவு குறித்து ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகத் தோன்றுகிறது. தனித்தனியான வழக்கு மூலங்களில் இரண்டுமே எழுமேயானால், குற்றவியல் நடவடிக்கை மற்றும் உரிமையியல் நடவடிக்கையை ஒரே நேரத்தில் தொடர எவ்வித தடையுமில்லை என்றே நாங்களும் கருதுகிறோம். ட்ரைசன்ஸ் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் வழக்கு (மேற்படி) முடிவு இந்த வழக்கிற்கு சமமாகப் பொருந்தும்."

23. எதிர்மேல்முறையீட்டாளர் 2 சார்பாக என்ன வாதிடப்பட்டது என சாதாரணமாகக் கூறினால் எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் துவக்கப்பெற்ற உரிமையியல் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளை தனித்தனியானது மற்றும் ஒன்றிலிருந்து மற்றொன்று தனியானது, அதாவது ஒப்பந்த மீறலுக்கான பொறுப்பு, இதச பிரிவு 405 மற்றும் 415 இன் கீழ் செய்யப்பட்ட குற்றத்தின் பொறுப்பிலிருந்து வேறுபட்டது. எனவே, இங்கு மேல்முறையீட்டாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளை செல்லாதாதாக்க முடியாது.

24. எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 அந்த பகுதியை விற்க ஜிபிஏ கொடுக்கவில்லை என்பதால் 8000 சதுர அடி பரப்பளவை விற்பனை செய்வதற்கான விற்பனை ஆவணத்தை மேல்முறையீட்டாளர்களால் நிறைவேற்ற முடியாது என்று மேலும் வாதிடப்பட்டது. எனவே, அவர்களது அங்கீகாரத்தை விட அதிகமாக மேல்முறையீட்டாளர்களால் செய்யப்பட்ட விற்பனை சட்டபூர்வமற்றதாகவும் மேல்முறையீட்டாளர்களின் குற்ற நோக்கைக் காட்டுவதாகவும் உள்ளது. மேலும், மேல்முறையீட்டாளர்களால் நான்கு கூடுதல் குடியிருப்புத் தளம் விற்கப்பட்டது இசைவுத் தீர்வு நடவடிக்கையிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது, எனவே இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் இசைவுத் தீர்வு நடவடிக்கைகள் சார்பாக வைக்கமுடியாது.

எதிர்மேல்முறையீட்டாளர் 1 ஆன மாநில அரசு சார்பான வாதங்கள்

25. எதிர்மேல்முறையீட்டாளர் 2 உரிமையியல் தன்மையான பிரச்சனைக்கு வேடம் போட மட்டுமே முயன்றுள்ளார் என்கிற வாதத்தைப் பொறுத்தவரை, மேல்முறையீட்டாளர்கள் அதிகாரமின்றி மேற்சொன்ன குடியிருப்புத் தளங்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் எழுதிக் கொடுத்துள்ளார் என்கிற தெளிவான புகார்கள் இந்த தற்போதைய சூழ்நிலைகளில் இந்த விஷயத்தில் தலையிட எந்தக் காரணங்களும் இல்லை என உயர்நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது என கர்நாடகா அரசு அதாவது எதிர்மேல்முறையீட்டாளர் 1 சார்பாக ஆஜரான வழக்கறிஞர் சமர்ப்பித்துக் கொண்டார். இந்த வழக்கில் விஷயங்களில், இதச பிரிவுகள் 406, 419 மற்றும் 420 உடன்படிக்க

34 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கான தெளிவான பகுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என மேலும் சமர்ப்பித்துக் கொள்ளப்பட்டது.

பிரச்சனைகள்

26. இங்கு மேல்முறையீட்டாளர்கள் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்களால் கூறப்பட்ட சம்பந்தப்பட்ட விஷயங்களையும் வாதங்களையும் பார்வையிட்டு, எங்களுடைய கருத்தின்படி கீழ்கண்ட மூன்று முக்கியமான பிரச்சனைகளுக்கு இந்த வழக்கில் முடிவு அவசியமாகிறது.

- பிரிவுகள் 406, 419 மற்றும் 420 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கான தேவையான பகுதிகள் மேலீடாக செய்யப்பட்டுள்ளதா?
- கூடுதல் குடியிருப்புத்தளம் விற்பனை செய்யப்பட்டிருந்தாலும் கூட, ஒப்பந்த மீறல் மட்டுமா அல்லது ஏமாற்றுதல் குற்றமாக அமையுமா ?
- பிரச்சனை முழுதும் உரிமையியல் தன்மையதா எனவே நீக்கறவு செய்யத்தக்கதா?

பிரிவுகள் 406, 419 மற்றும் 420 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கான தேவையான பகுதிகள் மேலீடாக செய்யப்பட்டுள்ளதா?

27. இங்குள்ள தரப்பினர்களின் செய்யப்பட்ட வாதங்களின் உண்மையை உறுதிசெய்ய முதலில், இங்குள்ள மேல்முறையீட்டாளர் மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கான சம்மந்தப்பட்ட பகுதிகள் மேலீடாக செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்வதுதான். சம்பந்தப்பட்ட பிரிவுகள் பின்வருமாறு படிக்கப்படுகிறது:

"405. குற்ற நம்பிக்கை மீறல் - யாராயிருந்தாலும், சொத்தை எந்த முறையிலும் ஒப்படைத்திருந்து அல்லது சொத்தின் மீது எந்த மேலதிக உரிமை இருந்து, நேர்மையற்று கையாடல் செய்து அல்லது அந்த சொத்தை சொந்த பயனுக்கு மாற்றினால் அல்லது நேர்மையற்றுப் பயன்படுத்தினால் அல்லது அந்த சொத்தை, நிறைவேற்றப்பட வேண்டிய அத்தகைய நம்பிக்கை அல்லது சட்ட ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட அல்லது பொதிந்துள்ள அத்தகைய பொறுப்பை அவர் கொண்டுள்ளதிலிருந்த அல்லது அவ்விதம் செய்ய பிற எந்த நபரும் வேண்டுமென்றே சட்டத்தால் சொல்லப்பட்ட எந்த உத்தரவையும் மீறினால் குற்றவியல் நம்பிக்கை மீறல் செய்ததாக அமையும்.

[விளக்கம் [1] பணியமைப்பில் ஒரு நபர் நியமனம் செய்யபவராக இருந்துக்கொண்டு [பணியாளர் சேமநல நிதி மற்றும் பல்வகை வகைக்கூறுகள் சட்டம் 1952 (19/1952) பிரிவு 17 இன் கீழ் விலக்குப் பெற்றிருந்தாலும் அல்லது இல்லையென்றாலும்] தற்போது நடைமுறையில் உள்ள எந்த சட்டத்தாலும் தோற்றுவிக்கப்பட்ட சேமநல நிதி அல்லது குடும்ப ஓய்வூதிய நிதியிலிருந்து பணியாளருக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பளத்திலிருந்து பணியாளர் பங்காக பிடித்தம் செய்தால், அவரால் அவ்விதம் கழிக்கப்பட்ட தொகை

ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்சொன்ன சட்டத்தை மீறி மேற்சொன்ன நிதிக்கு அத்தகைய பங்களிப்பை செலுத்துதலில் அவர் தவறு செய்தால் மேலே கூறியவாறு சட்டத்தின் உத்தரவை மீறி நேர்மையற்று மேற்சொன்ன பங்களிப்புத் தொகையான பயன்படுத்தியதாக கருதப்படும்].

[விளக்கம் 2- வைக்கப்பட்டுள்ள பணியாளர் மாநில காப்பீடு நிதி மற்றும் பணியாளர்கள் மாநில காப்பீடு சட்டம் 1948 (34/1948)இன் கீழ் ஏற்படுத்தப்பட்ட பணியாளர் மாநில காப்பீடு கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருவதில் பணியாளருக்குரிய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து பணியாளர் பங்களிப்பாக செலுத்தும் பணியமர்த்துநராக உள்ளவர் மேற்சொன்ன சட்டத்தை மீறி மேற்சொன்ன நிதிக்கு அத்தகைய செலுத்துதலில் அதுத் தவறிழைத்தால் மேலே சொன்னவாறு சட்டத்தின் உத்தரவை மீறி, நேர்மையற்று அந்த சொல்லப்பட்ட பங்களிப்புத் தொகையை பயன்படுத்தியதாகக் கருதப்படும்.

406. குற்றவியல் நம்பிக்கை மீறலுக்கான தண்டனை

குற்றவியல் நம்பிக்கை மீறலை எவர் செய்தாலும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்ககூடிய காலத்திற்கான சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தந்து தண்டிக்கப்படலாம்.

419 ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதலுக்கு தண்டனை

ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுபவருக்கு மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கான தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தந்து தண்டிக்கப்படலாம்.

420. ஏமாற்றி மற்றும் நேர்மையற்று சொத்தைத் தர தூண்டுதல்

யாரேனும் ஏமாற்றி, அதன் மூலம் ஏமாற்றப்பட்ட நபரை எந்த ஒரு நபருக்கும் எந்தவொரு சொத்தை வழங்கவோ அல்லது செய்யவோ தூண்டினால் அல்லது ஒரு மதிப்புப் பத்திரம் முழுவதையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ, அல்லது கையொப்பமிடப்பட்ட அல்லது முத்திரையிடப்பட்ட எதையும், மற்றும் மதிப்புப் பத்திரமாக மாற்றக்கூடிய எதையும் மாற்றவோ அல்லது அழிக்கவோ செய்யும் நபரை ஏழாண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான விளக்கத்துடன் கூடிய சிறைத்தண்டனையுடன் தண்டிக்கப்பட வேண்டும், மேலும் அபராதம் விதிக்கப்படும்.

28. இந்த தற்போதைய வழக்கில், மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட புகாரானது குற்ற நம்பிக்கைத் துரோகம் மற்றும் ஏமாற்றுதல் ஆகிய குற்றங்கள் பற்றியதாகும். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 405 இன் கீழ் வைக்கப்பட்டவாறு குற்றநம்பிக்கை துரோகமானது, இந்திய தண்டனை சட்டம் பிரிவு 415 இன் கீழ் வரையறுக்கப்பட்ட குற்றமாக, மோசடி அல்லது மற்றொருவரின்

சொத்தை தனது சொந்தப்பயன்பாட்டிற்கு மாற்றுவது நேர்மையற்ற நோக்குடன் அதுவும் மறுபுறம் ஏமாற்றமாகவும் ஒரு குறிப்பிட்ட நபருக்கு எந்த சொத்தையும் தர மற்றொரு நபரை தூண்டும் நோக்கில் நேர்மையற்ற மற்றும் மோசடி எண்ணத்தின் பகுதியுடையதாகவும் இருக்கும். மேற்சொன்ன குற்றங்கள் செய்யப்பட்டதை நிரூபணம் செய்ய மேலீடான முந்தைய நிபந்தனையாக நேர்மையற்ற எண்ணத்தை இரு பிரிவுகளும் தெளிவாக நிர்ணயித்துள்ளது. எனவே நபர்களால் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட செயல்களை மதிப்பிட, நேர்மையற்ற அல்லது மோசடியான திட்டத்தின் தொடர்ச்சியாக மேல்முறையீட்டாளர்கள் செயல்களால் செய்யப்பட்டுள்ளதா என்ற பரிசீலனை செய்ய வேண்டிய வினா ஒன்றாகும்.

29. கையில் உள்ள வழக்கின் விஷயங்களுக்கு வரும்போது, நபர்களிடையே உள்ள வாதிடும் வாதம் என்னவென்றால், ஜேடிஎ -இன் வரையறைகளில் மற்றும் நபர்களிடையே ஏற்பட்ட துணை ஒப்பந்தத்தின்படியும் கட்டுமான நிறுவனம் 4 கூடுதலான குடியிருப்புத் தளங்களை அதன் பங்கைத் தாண்டி விற்றுள்ளது தான். அதற்கு சாதகமாக ஒன்பது குடியிருப்புத் தளங்களை மட்டுமே விற்க உரிமையுடைய கட்டுமான நிறுவும் பதிலாக மொத்தமாக 13 குடியிருப்புத் தளங்களுக்கு விற்பனை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது. எனவே, அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள 9 குடியிருப்புத் தளத்தை தாண்டி நிறுவனம் சாதாரணமாக விற்றுள்ளது, மேலும் தரப்பினரிடையே ஏற்கனவே உரிமையியல் பிரச்சனை உள்ளது என்ற காரணத்தை மட்டும் காட்டி விளைவாக குற்றப் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது.

30. 19.02.2015 தேதியிட்ட பிந்தைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரையறைகளில், ரெலிகேர் பின்வேஸ்ட் லிமிடெட் இடமிருந்து எதிர்மேல்முறையீட்டாளர் 2 வாங்கிய கடன் தொகைக்கு பகுதியான செலுத்துதலை, இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட மேற்சொன்ன வளர்ச்சி திட்டத்தின் விற்பனை வருவாயிலிருந்து செலுத்தப்பட்ட ஒத்திசைவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என மாறாக மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டனர். ஒவ்வொரு குடியிருப்புத் தளத்திற்கும் ரூ.40,00,000 செலுத்தி 15 குடியிருப்புத் தளங்களுக்கு மறுப்பின்மை சான்றிதழ் பெற, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக மேல்முறையீட்டாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

31. மேல்முறையீட்டாளரால் செய்யப்பட முக்கிய வாதம் மற்றும் பிரச்சனையின் மையப் புள்ளியும் கூட, எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிட்டெடுக்கு செலுத்த வேண்டிய ஈடு செய்வதற்காக, அவர்களது பங்கைத் தாண்டி கூடுதல் குடியிருப்புத் தளத்தை விற்க மேல்முறையீட்டாளர்களுக்கு உரிமை உள்ளது என்பது தரப்பினர்களிடையே குறிப்பாக ஒப்புக்கொண்டதுதான். கூடுதலாக குடியிருப்புத் தளத்தை விற்பதற்கு மேல்முறையீட்டாளர்கள் முன்பு அனுமதிக்கப்பட்டவாறு எதிர்மேல்முறையீட்டாளர் ஜேடிஎ மற்றும் ஜிபிஎ- க்கு முடிவாக பின்னேற்பு பத்திரம் எழுதிக் கொடுக்க எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஒப்புக்கொண்டுள்ளார் என மேலும் வாதிடப்பட்டது.

32. ஆயினும், ஒப்புதல் பத்திரம் ஒருபோதும் ஏற்படுத்தப்படவில்லை, பின்னர் ஜேடிஏவின் விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று வாதிட்டு எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 ஜிபிஏவை ஒருதலைப்பட்சமாக ரத்து செய்தார்.

33. ஜிபிஏ ரத்து செய்யப்பட்ட பின்னர் மட்டுமே பிரச்சனையில் உள்ள சொத்தினை மாற்றுவதிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஐ தடுக்கு இடைக்கால உத்தரவு கோரி, இசைவு தீர்ப்புக்கு நிறுவனம் மனுத் தாக்கல் செய்துள்ளது. அதே சமயம், இந்த தகராறு இசைவுத் தீர்ப்பாயத்தின் முன் தீர்ப்புக்காகக் காத்திருந்தபோது, எதிர்மேல்முறையீட்டாளர் எண் 2 மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றவியல் புகார் அளித்தார்.

34. இந்த நிலையில், முடிவாக இரு தரப்பினர்களும் இசைவுத் தீர்வாளர் முன்பாக பகுதியாக வெற்றிபெற்ற போதிலும் அவர்களது உரிய கோரிக்கைகளின் வரையறைகளில், எதிர்மேல்முறையீட்டாளர் 2 இன் கருத்துப்படி ஒரு தலையாக ஜிபிஏ ரத்து செய்யப்பட்டிருக்கக்கூடாது என இசைவுத் தீர்வாளர் கருதியுள்ளது இங்கு மேலும் குறிப்பாக கூற வேண்டியுள்ளது. இதனால் மனக்குறையுற்ற எதிர்மேல்முறையீட்டாளர் 2 பின்னரும் இசைவுத் தீர்வாளரால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார். மேலும், இசைவுத் தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகள் நிலுவையிலிருக்கும்போது மேல்முறையீட்டாளரால் கூடுதலாக

குடியிருப்புத்தளம் விற்றது குறித்த பிரச்சனை, உரிமையியல் நடவடிக்கையில் நிலுவையிலுள்ள நான்கு கூடுதல் குடியிருப்புத் தளம் விற்றது குறித்த அவரது கோரிக்கையை தொடர சுதந்திரம் கோரி எதிர்மேல்முறையீட்டாளர் 2 திரும்பப் பெற்றுள்ளார்.

35. அத்தகைய விஷயங்களை கவனமாக மதிப்பிடும்போது, எதிர்மேல்முறையீட்டாளர் -2 ஆல் கூறப்பட்டவாறு, கூடுதல் குடியிருப்புத் தளங்கள் ஏதேனும் இருப்பின், ஏமாற்றி அல்லது வேண்டுமென்றே விற்க மேல்முறையீட்டாளர் முயன்றார் என எந்த நீட்சியிலும் முடிவு செய்ய முடியாது. ஜிபிள ரத்து செய்யப்பட்டபிறகு, தரப்பினர்களிடையே உள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்கு 02.03.2016 அன்று மேல்முறையீட்டாளரே இசைவுத் தீர்பாயத்திற்குச் சென்று அதில் எதிர்மேல்முறையீட்டாளர் 2, 09.03.2016 தேதியிட்ட மறுப்புரையை அதன்படி தாக்கல் செய்துள்ளார் என்பது இங்கு மனதில் கொள்ளவேண்டும். 29.03.2016 அன்றுதான் மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதிர்மேல்முறையீட்டாளர் குற்ற எண் 185/2016 இல் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் அதனை உரிமையியல் நடவடிக்கையில் தொடர்வதற்காக மட்டுமே மேல்முறையீட்டாளர் நான்கு கூடுதல் குடியிருப்புத் தளங்களை விற்பது குறித்து எதிர்மேல்முறையீட்டாளர் தனது வேண்டுதலை திரும்பப் பெற்றுள்ளார்.

36. இந்த நிலையில், இந்த நீதிமன்றம் பிரீத்தி ஷராப் மற்றும் ஒருவர் எதிர் தலை நகரம் டெல்லி மற்றும் ஒருவர் (மேற்படி) மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா ஏஜென்சிஸ் எதிர் ஆந்திர பிரதேச அரசு மற்றும் ஒருவர் (மேற்படி)இல் வழங்கிய தீர்ப்புரையை சார்ந்து, யாருடைய சொத்து விற்கப்பட்டுள்ளதோ அந்த நபர் அந்த சொத்தை மீட்பதற்காக உரிமையியல் வழக்கு போட்டுள்ளார் அல்லது பிரச்சனை இசைவுத் தீர்பாயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று வாதிடுவதால் மட்டுமே மேல்முறையீட்டாளர் குற்றவியல் வழக்கைத் தவிர்க்கவே முடியாது என எதிர்மேல்முறையீட்டாளர் 2 மேலும் சமர்ப்பித்தார்.

37. எப்படியாயினும், உரிமையியல் மற்றும் குற்றவியல் தன்மை ஆகிய இரண்டும் வழக்குப் பொருளாக இருப்பின் ஒவ்வொன்றும் மாற்றத்தை கருதாது தொடரப்பட வேண்டும் என்பதில் சிறிதளவு ஐயப்பாடு கூட இல்லை. தற்போதைய வழக்கில் பரிசீலிக்கத் தேவையான வினா என்னவென்றால், உரிமையியல் வழக்கின் முன்னிலையில் குற்றவியல் வழக்குத் தொடரலாமா என்பதல்ல, ஆனால் குற்றவியல் வழக்குக்கான சம்பந்தப்பட்ட பகுதிகள் மேலீடாகக் கூட காட்டப்பட்டுள்ளதா என்பது தான். விஷயங்களை சார்ந்து, எவ்வித குற்றவியல் நம்பிக்கை துரோகம் அல்லது ஏமாற்றுதல் ஆகியவற்றிற்க்கு வலிமையான காரணங்கள் தெளிவாக்க காட்டப்படவில்லை.

38. தரப்பினர்களிடையே உள்ள பிரச்சனை ஒப்பந்த மீறலில் ஈடுபட்ட ஒன்று என்றே நன்கு வரையறை செய்ய முடியும். தற்போது, ஒப்பந்த மீறல் மற்றும் ஏமாற்றுதல் குற்றம் ஆகியவற்றிடையே என்ன எப்படி உள்ளது என்பது பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்படுகிறது.

கூடுதலாக குடியிருப்புத் தளங்கள் விற்கப்பட்டிருக்கமேயானால் ஒப்பந்தமீறலாக மட்டும் கருதப்படுமா?

39. இந்த நீதிமன்றம், ஹிருதய ரஞ்சன் பிரசாத் வர்மா மற்றும் எதிர் பீகார் மாநிலம் மற்றும் பலர் என்ற வழக்கில் கீழ்கண்டவாறு கருத்துரைத்துள்ளது:

"...வெறும் ஒப்பந்த மீறலுக்கும் ஏமாற்றுதல் குற்றத்திற்கும் இடையே போதுமான வேறுபாடு உள்ளது என்று கருத்தியுள்ளது.அவரது பிற்கால நடத்தையினால், தூண்டுதலின்போது உள்ள எண்ணத்தின் அடிப்படை தீர்மானிக்கப்படுகிறது, ஆனால் இந்த பிற்கால நடத்தை மட்டுமே சோதனையல்ல. வியாபாரத்தின் ஆரம்பத்தில் அதாவது குற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் நேரத்தில், மோசடி அல்லது நேர்மையற்ற நோக்கம் காட்டப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் மீறல் மட்டுமே மோசடிக்கு குற்றவியல் நடவடிக்கைக்கு வழிவகுக்க முடியாது. நோக்கம் தான் குற்றத்தின் சாராம்சமாக உள்ளது. ஒரு நபரை மோசடியில் குற்றவாளியாகக் கருத, அவர் வாக்குறுதி அளிக்கும் நேரம் முதலே மோசடி அல்லது நேர்மையற்ற நோக்கம் கொண்டவர் என்பதைக் காட்ட வேண்டியது அவசியம்..."

40. இந்த முடிவை, தற்போதைய விஷயங்களை பொருத்தினால், தற்போது கைவசம் உள்ளது வழக்கு இந்த நீதிமன்றத்தின் தலையீட்டிற்கு உரியதாக அதில் பிரிவுகள் 405, 409 மற்றும் 420 இன் கீழ் நேர்மையற்ற அல்லது மோசடியான எண்ணத்திற்கான பகுதிகள் காட்டப்படவில்லை.

இந்த பிரச்சனை முற்றியலுமாக உரிமையியல் தன்மையுடையதா எனவே நீக்கறவு செய்யத்தக்கதா?

41. தரப்பினர்களின் சம்பத்தப்பட்ட வாதங்களையும் இந்த நீதிமன்றத்தின் முடிவுகளையும் பரிசீலித்து, நேர்மையற்ற அல்லது மோசடியான எண்ணம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக காட்டப்படவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். உரிமையியல் தன்மையுடைய பிரச்சனைகளில் முடிவு காண்பதில் நிச்சயமாக தற்போதைய பிரச்சனை என்பதால் தொடர்விளைவாக எதிர்மேல்முறையீட்டாளர் 2 பல உரிமையியல் வழக்குக்களை தாக்கல் செய்துள்ளதால் ஒருவர் எவ்வழியிலும் அதற்கு குற்றவியல் வண்ணம் பூசி அந்த அளவுக்கு பிரச்னையை நீட்டியிருக்க வேண்டியதில்லை. இந்த நீதிமன்றத்தால் சரியாக வலியுறுத்தப்பட்டவாறு, தி/ள் இந்தியன் ஆயில் கார்பொரேஷன் எதிர் தி/ள் என்இபிசி இந்தியா லிமிடெட் மற்றும் பலர் வழக்கில் கீழ்கண்டவாறு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது:

“ 14. சட்டபூர்வமான காரணம் அல்லது குறைபாடு உள்ள எவரும் குற்றவியல் சட்டத்தில் கிடைக்கும் தீர்வுகளைத் தேடுவதைத் தடுக்கக்கூடாது என்றாலும், குற்றவியல் நடவடிக்கை சட்டப்படி உரிமையற்றது என்பதையும், உரிமையியல் சட்டத்தில் மட்டுமே தீர்வு காண முடியும் என்பதையும் முழுமையாக அறிந்த, குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடங்கும் அல்லது தொடர்ந்து தொடரும் ஒரு புகார்தாரர், அத்தகைய தவறான குற்றவியல் நடவடிக்கைகளின் முடிவில், சட்டத்தின்படி, பொறுப்பேற்க வேண்டும். ”

42. மேலும் உரைக்கப்பட்டதாவது:

"13.இந்த பிரச்சனையில், சுத்தமான உரிமையியல் பிரச்சனைகளை குற்றவியல் வழக்காக மற்றும் போக்கு வணிக வட்டாரத்தில் வளர்ந்து வருவதை கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. உரிமையியல் சட்ட நிவாரணங்கள் காலம் அதிமாக எடுத்துக்கொள்ளும், மேலும் கடன்தருவோர்/பணம் செலுத்துவோரின் நலனுக்கு போதுமான அளவு பாதுகாக்காது என்கிற நடப்பு கருத்தே இதற்கு தெளிவாக அமைந்துள்ளது. ஒரு நபர் எவ்வாறாயினும் குற்றவியல் நடவடிக்கையில் மாட்டிக்கொண்டால் உடனடித் தீர்வுக்கான வாய்ப்பு உள்ளது என்றும் கூட ஒரு கருத்து உள்ளது. குற்றவியல் குற்றம் இல்லாத உரிமையியல் பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளில் தீர்வுக்கான குற்றவியல் நடவடிக்கை வழியாக அழுத்தம் தரும் முயற்சி கண்டிக்கப்பட வேண்டும் மற்றும் தடை செய்யப்படவேண்டும். "

43. முந்தைய நேர்வில், சாகர் சூரி மற்றும் ஒருவர் எதிர் உ.பி. மாநிலம் மற்றும் பலர் வழக்கில் இந்த நீதிமன்றம் பின்வருமாறு கருத்தியுள்ளது:

"8. சட்டம் பிரிவு 482 இன் கீழ் வரம்பு மிகவும் கவனமுடன் செயல்படுத்தப்பட வேண்டும். இந்த அதிகார வரம்பு செயல்படுத்துவதில், உயர்நீதிமன்றம் மேம்போக்காக விஷயத்தை பரிசீலிக்கக்கூடாது. விஷயம் உரிமையியல் தன்மையுடையதாய் அவசியம் இருந்து அதற்கு குற்றவியல் குற்றமாக வேஷம் தரப்பட்டுள்ளதா என்பது பார்க்கப்பட வேண்டும். குற்ற நடவடிக்கைகள் சட்டத்தில் உள்ள பிற குறுக்கு வழி நிவாரங்களில் ஒன்றல்ல. நடவடிக்கைக்கு முன், மிக கவனமான எச்சரிக்கையை குற்றவியல் நீதிமன்றம் செலுத்தவேண்டும். சட்டம் பிரிவு 482 இன் கீழ் அதிகார வரம்பினை உயர்நீதிமன்றம் செலுத்துவதற்கு, இந்த நீதிமன்றம் சில கொள்கைகளின் அடிப்படையை வகுத்துள்ளது. நீதியை நிலைநாட்ட அல்லது நீதிமன்றத்தின் பிழையான நடவடிக்கையை தடுத்திட இந்த பிரிவின் கீழ் அதிகார வரம்பு செலுத்தப்பட வேண்டும்."

44. மேலும், குற்றவியல் விசாரணை முறை சட்டப் பிரிவு 482ன் கீழ் இயல்பான அதிகாரங்களைச் செலுத்துவது குறித்து குறிப்பிட்ட தீர்ப்பான ஹரியானா மாநில அரசு மற்றும் பலர் எதிர் சி. எச். பஜன் லால் மற்றும் பலர் வழக்கில் நீதியை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றத்தின் இயல்பான

அதிகாரங்கள் பயன்படுத்தப்படக்கூடிய பின்வரும் வகை வழக்குகளை இந்த நீதிமன்றம் வகுத்துள்ளது:

"(1) முதல் தகவல் அறிக்கையில் அல்லது புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், தோற்ற மதிப்பில் அவரை எடுத்துக்கொள்ளப்பட்டும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் மேலீடாக ஒரு குற்றமாக அமையாதிருத்தல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக அமையத்திருக்கும்போது;

(2) முதல் தகவல் அறிக்கை மற்றும் முதல் தகவல் அறிக்கையோடு உள்ள பிற ஆவணங்களில், எதேனும் இருப்பின் , அவற்றிலும் பிடியாணை வேண்டா குற்றத்தை சட்டப் பிரிவு 155(2)இன் பார்வையில் குற்றவியல் நடுவரின் உத்தரவின் கீழ் இல்லாமல் காவல் அதிகாரிகளால் புலன் விசாரணை நியாயப்படுத்துவதை வெளிப்படாதிருக்கும் போது;

(3) முதல் தகவல் அறிக்கையில் அல்லது புகாரில் கூறப்பட்டுள்ள மறுக்கப்படாத குற்றச்சாட்டுகள் மற்றும் அதற்கு ஆதரவாக சேகரிக்கப்பட்ட சான்றுகள் ஏதேனும் குற்றம் நடைபெற்றிருப்பதை காண்பிக்காவிட்டால் அல்லது எதிரிக்கு எதிராக ஒரு வழக்கை முன்வைக்காத பொழுது;

(4) மு. த. அ.வில் கூறப்பட்ட புகார்கள் பிடியாணை வேண்டா குற்றமாயிருந்து ஆனால பிடியாணைக் குற்றமாயிருந்து சட்டப் பிரிவு 155(2)ன் கீழ் சொல்லப்பட்டவாறு குற்றவியல் நடுவரின் உத்தரவின்றி ஒரு காவல் அதிகாரியால் புலன் விசாரணைக்கு அனுமதி தரப்படாத போது;

(5) மு. த. அ அல்லது புகாரில் கூறப்பட்ட கூற்று பொருளற்றதாயும் மற்றும் இயல்பாக நடக்க இயலாததாகவும் இருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான நடவடிக்கைக்கு போதுமான காரணம் இருப்பதாக, அதன் அடிப்படையில் சாதாரண மனிதனால் முடிவு எடுக்க இயலாதபோது;

(6) சட்டத்தின் எந்தவொரு விதியிலும் அல்லது சம்பந்தப்பட்ட சட்டத்தில் நிறுவனத்திற்கு ஒரு வெளிப்படையான சட்ட தடை இருக்கும்போது, வழக்குத் தொடரப்படுதல் மற்றும்/அல்லது சட்டத் தொகுப்பு அல்லது சம்பந்தப்பட்ட சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விதி இருக்கும்போது, பாதிக்கப்பட்ட தரப்பினரின் குறைபாட்டிற்கான பயனுள்ள இழப்பீட்டை வழங்குதல்

(7) ஒரு குற்றவியல் நடவடிக்கை தீய எண்ணத்துடன் தெளிவாக செய்யப்படும்போது மற்றும்/அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீது பழி

வாங்கும் நடவடிக்கைக்காக தீய எண்ணத்துடன் தவறாக தொடுக்கப்பட்டபோது மற்றும் தனி நபரின் மற்றும் தனியான காழ்ப்புணர்ச்சியுடன் இழிவு செய்யம்போது"

45. தற்போதைய உண்மையான விஷயத்திற்கு, இந்தக் கொள்கையை பொருத்திபார்க்கும்போது, மேலே பட்டியலிடப்பட்ட ஏழு வகைப்பாடுகளில் முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் வகைப்பாட்டில் அதிகாரவரம்பினும் தற்போதை வழக்கு தெளிவாக வரும் என்பது பாதுகாப்பாக முடிவு செய்ய இயலும். எனவே இந்த நீதிமன்றத்தின் தலையீடு இந்த வழக்கிற்கு தேவைப்படுகிறது மற்றும் கு.வி.மு.ச.பிரிவு 482 இன் கீழ் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினைத் தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது. உரிமையியல் பிரச்சனையின் எல்லையை நீட்சி செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அவசியமாக குற்றவியல் வண்ணம் பூசப்பட்டுள்ளது என நாங்கள் காண்கிறோம்.

46. சமீபத்தில், குற்றவியல் நடவடிக்கைகள் துன்புறுத்தலுக்கு கருவியாகப் பயன்படுத்தக்கூடாது என்ற நீண்ட நாள் கொள்கையினை இந்த நீதிமன்றம் மீண்டும், ரந்தீர் சிங் எதிர் உ.பி. மாநிலம் மற்றும் பலர் வழக்கில் வலியுறுத்தியுள்ளது. நீதிமன்றம் கீழ்கண்டவாறு கருதியுள்ளது:

"33. எந்த நீதிமன்றத்தின் தவறான நடவடிக்கையை தடுக்கும் காரணத்திற்காக அல்லது பிறவாறு நீதியை நிலைநாட்ட, கு.வி.மு.ச.482 பிரிவின் அதிகாரவரம்பு எப்போதாவது தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை. ஒரு புகார், குற்றவியல் குற்றத்தை காட்டுகிறதா அல்லது இல்லையா என்பது கூறப்பட்ட புகாரின் தன்மையை பொறுத்தது மற்றும் ஒரு குற்றவியல் குற்றத்தின் தேவையான பகுதிகள் உள்ளனவா அல்லது இல்லையா என்பது உயர்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படவேண்டும். உரிமையியல் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் புகாரில் குற்றவியலின் இயல்பும் இருக்கும் என்பதில் ஐயப்பாடே இல்லை இருப்பினும், உரிமையியல் தன்மையுடைய பிரச்சனையில் குற்றவியல் குற்ற வண்ணம் தரப்பட்டள்ளதா என்பதை உயர்நீதிமன்றம் காண வேண்டும். அத்தகைய சூழ்நிலையில், உயர்நீதிமன்றம், மேற்கூறிய பரமஜீத் பட்டா வழக்கில் இந்த நீதிமன்றம் நடத்திய குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்ய தயங்கக்கூடாது."

47. மேலும், உரிமையியல் பிரச்சனையோடு ஒப்பிடுகையில் குற்றவியல் வழக்கில் விரைவான நிவாரணம் தரப்படுவதை ஆதாயமாகக் கொண்டு அதனால் உரிமையியல் பிரச்சனைக்கு குற்றவியல் வண்ணம் பூசுவதற்கு இந்த நீதிமன்றம் எண்ண இயலாத வழக்குகளில் ஒப்புதலின்மையைத்

தெரிவித்துள்ளது. அத்தகைய நடவடிக்கைகள் சட்டத்தின் நடைமுறையை தவறாகப் பயன்படுத்தலன்றி வேறில்லை. அதற்கு முழுமையாக ஊக்கம் தாராமலிருக்க வேண்டும்.

48. மேற்சொன்ன விஷயங்கள் மற்றும் விவாதங்களின் காரணமாக கர்நாடக உயர்நீதிமன்றம் வழங்கிய 13.08.2019 தேதியிட்ட குற்றமுறு உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. இதச பிரிவுகள் 406, 419 420 உடன்படிக்க 34 இன் கீழுள்ள குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக 29.03.2017 தேதியிட்ட குற்ற அறிக்கையின் தொடர்ச்சியாக VI கூடுதல் தலைமை பெருநகர நீதிமன்றத்தில் உள்ள அ.ப. எண் 20609/2017 நடவடிக்கைகள் மற்றும் 29.03.2016 தேதியிட்ட குற்றமுறு மு.த.அ. எண் 185/2016 நீக்கறவு செய்யப்படுகிறது.

49. முடிவாக, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."